<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 5/2018**

பெயர்:**சின்னராஜ்** நாள்: 03.09.2025

வா.சா.1 – 8-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.

வா.சா.1 – சின்னராஜ் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி தொடக்க நேரம்11:50</u>

எனது முதல் விசாரணையில் 15.12.2017 தேதியன்று தாவா சொத்தில் நான் விவசாயம் செய்துகொண்டு இருக்கும்போது 8-ம் பிரதிவாதி இடையூறு செய்ததாக நான் சொல்லியிருக்கிறேன் என்றும் அது சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் 8-ம் பிரதிவாதிக்கு எதிராக புகார் ஏதும் அளித்தேனா என்றால், இல்லை. உண்மையில் 8-ம் பிரதிவாதி இடையூறு செய்திருந்தால் நான் காவல் நிலையத்தில் புகார் அளித்திருப்பேன் என்றும் அவ்வாறு 8-ம் பிரதிவாதி எந்தவொரு இடையூறும் செய்யவில்லை என்றால், சரியல்ல. எனக்கும் என்னுடைய சகோதரர் 8-ம் பிரதிவாதிக்கும் பேச்சுவார்த்தை கிடையாது என்றால், சரிதான். எனக்கு எனது தகப்பனார் திருமணம் செய்து வைக்கவில்லை என்றும் நானே திருமணம் செய்து கொண்டேன் என்றால், சரிதான். என்னுடைய அண்ணன் 8-ம் பிரதிவாதிக்கு எனது தகப்பனார் திருமணம் செய்துவைத்தார் என்றால், சரிதான். 8-ம் பிரதிவாதி என்னுடைய சொத்திற்கு எந்தவொரு இடையூறு செய்யவில்லை என்றும் நான்தான் அவருடைய சொத்திற்கு இடையூறு செய்கிறேன் என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கில் தாவா சொத்து எனக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்று சொல்லி இருப்பது தவறு என்றால்,

சரியல்ல. நான் தாவாவில் சொல்லியிருக்கும் வியாஜ்ஜிதம் மூலம் பொய்யானது ஆகையால் 8-ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால், சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 11:55</u>

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R

Digitally signed by ELAMATHI R
Date: 2025.09.03 14:28:30 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.